**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| | |
|---|---|
| வழக்கு எண்: C.C 28/2019 (Splitup C.C 228/2025) | காவல் நிலையம்: கவரைப்பேட்டை |

| | | |
|---|---|---|
| பெயர் : நந்தகுமார் | அ.சா.1 | நாள் : 01.04.2026 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் OATH Act 4 வது பிரிவின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நந்தகுமார் | தாலுக்கா | : | கும்மிடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | சிவலிங்கம் | தொழில் | : | ஓட்டுநர் |
| கிராமம் | : | கீழ்மேனி | வயது | : | 49 |

**(எதிரி 2 ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் 1, 3, 4 ஆகியோருக்கு எதிராக வழக்கு பிரிக்கப்பட்டு 299 CrPC ன் படி சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது).**

**முதல் விசாரணை**

நான் கீழ்மேனி கிராமத்தில் வசித்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை எப்போது எங்கு வைத்து எதற்காக இட்டேன் என தற்போது ஞாபகம் இல்லை. போலிசார் என்னை இதுவரை விசாரிக்கவில்லை. **(பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதவேண்டும் என்று அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை பரீசிலித்து அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையின்போது கடந்த 02.10.2019 ம் தேதி இரவு 10.15 மணியளவில் பஞ்செட்டி Sri Jai Bhavani Steel Company அருகே கவரைப்பேட்டை போலிசார் நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது அங்கு நானும் குமார் என்பவரும் சென்று என்னவென்று கேட்டதாகவும் அப்போது மேற்படி கம்பெனியில் இரும்பு பொருட்கள் திருடு போனது சம்மந்தமாக புகார் கொடுக்கப்பட்டு போலிசார் வழக்கு பதிவு செய்திருப்பதாகவும் சம்பவ இடத்தை பார்த்து மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் அதில்

நானும் குமாரும் சாட்சியாக கையொப்பங்கள் செய்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இட்டதாக கூறும் கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**(மறு விசாரணை இல்லை)**

ஒம்/– நந்தகுமார்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2026.04.01 11:19:19 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி